# தமிழ்நாடு சட்டப் பேரவை

## திருவள்ளுவர் ஆண்டு 2042 – தை 21

## 2011 பிப்ரவரி 4, வெள்ளிக்கிழமை

சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சட்டமன்றம்—தலைமைச் செயலக வளாகத்தில் உள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. ஆவுடையப்பன் அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
மேற்சென்று செய்யப் படும்."

வாழ்க்கையின் நிலையாமையை உணர்ந்து நம் உயிர் இருக்கும்போதே உயர்ந்த நற்பணிகளை ஆற்றிட முனைய வேண்டும்.

### 1. இரங்கல் தீர்மானம்

### உறுப்பினர் திரு. போளூர் ம. வரதன் அவர்கள் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. போளூர் ம. வரதன் அவர்கள் மறைவு குறித்த இரங்கல் தீர்மானம்.

"திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் தொகுதியிலிருந்து 2006 ஆம் ஆண்டு தமிழக சட்டப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவரும், அனைவரிடமும் நட்புணர்வோடு பழகி அன்புக்குப் பாத்திரமானவரும், இனிய பண்பும் செயல் திறனும் கொண்டவரும், தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்கும், நலனுக்கும் உழைப்பதில் தணியாத ஆர்வம் கொண்டவரும், வாக்களித்த தனது தொகுதி மக்களுக்குத் தன்னையே முழுமையாக அர்ப்பணித்துக்கொண்டு அரும்பணியாற்றியவரும், இளமைப்

பருவம் முதல் காங்கிரஸ் பேரியக்கத்தில் சேர்ந்து பல்வேறு பொறுப்புகளைத் திறம்பட வகித்தவரும், 1991 முதல் 1996 வரை ஸ்ரீபெரும்புதூர் தொகுதியிலிருந்தும், 2001 முதல் 2006 வரை செங்கம் தொகுதியிலிருந்தும் தமிழக சட்டப் பேரவைக்கு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றியவருமான திரு. போளூர் ம. வரதன் அவர்கள் 27–1–2011 அன்று மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

அவரது மறைவால் அவரை இழந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு இப்பேரவை ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது."

இந்த இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றுமுகத்தானும், மறைந்த மாண்புமிகு உறுப்பினருக்கு மரியாதை செலுத்தும் வகையிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.)*

மறைந்த உறுப்பினருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில், பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் ஒத்திவைக்கப்படுகின்றன.

பேரவை மீண்டும் நாளை (5–2–2011) சனிக்கிழமை காலை 9–30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை முற்பகல் 9–33 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

*****